IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC. 75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw8 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **மனோஜ்குமார்** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2023

**நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 எனக்கு தெரியும். 11.8.2022ம் தேதி இருக்கன்குடிக்கு டாடா ஏசி வண்டியில் சென்றோம். எனது வீட்டில் மூன்று பேர் எனது அம்மா ராணி, தங்கை விஸ்வாதினி மற்றும் நான் சென்றோம். மொத்தம் எத்தனை பேர் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சிப்பிப்பாறை அருகே லாரி வந்து இடித்ததாக சொன்னார்கள். எனக்கு**

தலையில் காயம் ஏற்பட்டது. நான் ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தேன். லாரியை யார் ஓட்டினார் என்று எனக்கு தெரியாது. எனது அம்மாவிற்கு இடதுபக்க புஜத்தில் அடிபட்டது. என் அம்மாவிற்கு இடது பக்க காதில் அடிபட்டது. எனது தங்கைக்கு வலது பக்க கையில் அடிபட்டது. காயம்பட்டவர்களை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனது தங்கையை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் பயணம் செய்தது டாட்டா ஏசி வாகனம் என்றால் சரிதான். டாட்டா ஏசி வாகனத்தில் ஆட்களை ஏற்றக்கூடாது என்றால் சரிதான். நாங்கள் பயணம் செய்த டாட்டா ஏசி வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் தெரியாது. வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாகன விபத்து நஷ்டஈட்டு தொகை அதிகமாக பெறவேண்டும் என்பதற்காக இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC. 75/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw9 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **விஸ்வாதினி** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2023

**சாட்சி இளவர் என்பதால் நீதிமன்ற கேள்விகள் கேட்கப்பட்ட கேள்விகள்**

**கேள்வி – உங்கள் பெயர் என்ன?**

**பதில் – விஸ்வாதினி**

**கேள்வி – உங்கள் அப்பா பெயர் என்ன?**

**பதில் – சமுத்திரவேல்**

கேள்வி – நீங்கள் என்ன படிக்கிறீர்கள்?

பதில் – 11ம் வகுப்பு படிக்கிறேன்

கேள்வி – நீங்கள் எங்கு வந்துள்ளீர்கள் என்று தெரிகிறதா?

பதில் – கோர்ட்

கேள்வி – நீங்கள் ஏன் நீதிமன்றம் வந்துள்ளீர்கள்?

பதில் – ஆக்சிடெண்ட் கேஸ் சம்பந்தமாக வந்துள்ளேன்.

முதல் விசாரணை

நான் தற்பொழுது புளியங்குடியில் வசித்து வருகிறேன். நான் 11ம் வகுப்பு படித்து வருகிறேன். சாட்சி மனோஜ்குமார் எனது அண்ணன். சாட்சி ராணி எனது அம்மா. அ.சா.1 எனக்கு தெரியும். 11.8.2022ம் தேதி இருக்கன்குடிக்கு டாட்டா ஏசி வண்டியில் 19 பேர் சென்றோம். சிப்பிப்பாறை அருகே நாங்கள் சென்றபோது லாரி கிழக்கில் இருந்து மேற்காக வந்து நாங்கள் பயணம் செய்த வண்டியில் வலது பக்கம் மோதியதில் எங்கள் வண்டி கீழே விழுந்தது. எனக்கு வலது கையில் மற்றும் தலையின் பின்பகுதியில் அடிபட்டது. எனக்கு நுரையீரல் ஆப்பரேசன் செய்தனர். எனது அண்ணனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது அம்மாவிற்கு இடதுபுஜத்தில் அடிபட்டது. எனது அம்மாவிற்கு இடது காது மற்றும் கண்ணம் அருகே அடிபட்டது. என்னை முதலில் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். லாரியை ஓட்டிய நபரை தெரியாது.

எதிரி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் பயணம் செய்தது டாட்டா ஏசி வாகனம் என்றால் சரிதான். டாட்டா ஏசி வாகனத்தில் ஆட்களை ஏற்றக்கூடாது என்றால் தெரியாது. விபத்து நடந்த நேரம் இருட்டாண நேரம் என்றால் சரிதான். அந்த சமயம் நான் டாட்டா ஏசி வாகனத்தின் பின்பக்கத்தில் உட்கார்ந்து இருந்தேன் என்றால் சரிதான். அதனால் நாங்கள் பயணம் செய்த வாகனத்திற்கு முன்னால் என்ன வாகனம் எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். லாரி மோதியதாக போலிசாரும் மற்றவர்களும்

சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நாங்கள் பயணம் செய்த டாட்டா ஏசி வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் தெரியாது. வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. வாகன விபத்து நஷ்டஈட்டு தொகை அதிகமாக பெறவேண்டும் என்பதற்காக இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.